புதுமை உரையாசிரியர்- தெய்வச் சிலையார்

மு.கயல்விழி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,

பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631502.

முன்னுரை:

இலக்கியம் என்பது படைப்பாளியின் எண்ணங்களின் அழகிய வெளிப்பாடாகும். ஒரு படைப்பாளி தன் வாழ்வில் கண்டு, கேட்டு, அறிந்த நிகழ்வுகளை நல்ல வடிவத்துடன் வெளிப்படுத்தும் போது அது சிறந்த இலக்கியமாகப் பரிணமிக்கின்றது. படைப்பாளியின் முதன்மையான நோக்கம் தான் வெளிப்படுத்தும் கருத்துகள் யாவும் படிக்கும் வாசகனிடம் முழுமையாகப் போய்ச் சேர்தல் வேண்டும் என்பதேயாகும். அவ்வாறு அமையாவிடின் அது அப்படைப்பின் அல்லது படைப்பாளியின் தோல்வியாகவே கருதப்படும். இலக்கியங்களின் முதன்மையான நோக்கம் இன்புறுத்தலே என்ற போதிலும் அவற்றிற்கும் சில சமூகப் பொறுப்புகள் உள. அவற்றில் சில வாழ்வியல் கருத்துகள், சமூகச் சிந்தனைகள், சமகாலப் பதிவுகள், நன்னெறி ஆற்றுப்படுத்தல்கள் போன்றவை இலை மறைவு, காய் மறைவாய் வெளிப்பட்டு நிற்கும் போது அவ்விலக்கியம் செவ்விலக்கியமாகக் கொண்டாடப்படுகின்றது. பொதுவாக இலக்கியங்களைப் படைத்தளிக்கும் இலக்கியவாதிகள் தாம் வாழ்ந்த காலத்தில் அனைவரினும் அறிவிற் சிறந்தோராக விளங்குவர். அவர்கள் படைக்கும் படைப்புகளைப் படிக்கும் வாசகர்கள் அனைவரும் அவர்களைப் போன்றே அறிவுடையோர்களாக இருப்பர் என்று கருதவியலாது. அவ்வாறான நேர்வில் படைப்பாளிக்கும், வாசகனுக்கும் இடையே பெருத்த இடைவெளி தோன்றிப் படைப்பாளியின் கருத்துகள் முழுமையாக வாசகனைச் சென்றடையாமல் போகக்கூடும். இதை வேறு வகையில் கூறுவதென்றால் படைப்பாளி கூறும் கருத்துகள் யாவும் முழுமையாக வாசகனைச் சென்றடைந்து விடுவதில்லை. அந்நூலில் கூறப்படும் பல்வேறு கருத்துகள், நுட்பங்கள், வடிவங்கள், உத்திகள், மறைமுகப் போக்குகள் போன்றவற்றை எல்லோரும் புரிந்து கொள்ளவியலாத நிலை தோன்றுகின்றது. இவ்வாறான நேர்வில் இக்குறையைப் போக்கத் தோன்றியவையே உரைகளாகும்.

உரை நூல்கள் படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும் இடையே பாலமாகத் திகழ்ந்தன. உரையாசிரியர்கள் மூலநூல்களுக்கு உரைகள் என்ற விளக்கத்தைப் படிப்போருக்கு நல்கி அந்நூலை எளிதில் புரிந்து கொள்ளச் செய்து இலக்கியம் வளம் செழிக்கச் செய்தனர். தமிழில் தோன்றிய எல்லாச் சிறந்த நூல்களுக்கும் உரை தோன்றிவிடவில்லை. மேலும் தோன்றிய எல்லா உரைகளும் சிறப்பானதாகவும் கொண்டாடப்படவுமில்லை. ஏராளமான தமிழ் இலக்கியங்கள் கால வெள்ளத்தில் பாதுகாப்பின்றி அழிந்தது போன்று உரைகளும் மறைந்து போயின. பழந்தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சில உரையாசிரியர்களின் உரை நூல்களே எஞ்சி நின்றன. அவ்வாறான உரையாசிரியர்களில் தெய்வச் சிலையார் முதன்மையானவர் ஆவார். அவர் ஒரு சில நூல்களுக்கே உரை வகுத்திருந்தாலும் அவையாவும் மிகச்சிறப்பானதாகக் கருதப் படுகின்றது. அன்னார் பறந்த அறிவும், விரிந்த ஆற்றலும், நுண்மான் நுழைபுலமும், பன்மொழி ஆற்றலும்

ஒருங்கே கொண்டவர். அவர் உருவாக்கித் தமிழுலகிற்கு அளித்த உரைகளின் சிறப்பை வெளிப் படுத்துவதே இவ்வாய்வின் முதன்மை நோக்காகும்.

தெய்வச் சிலையாரின் காலம்:

தெய்வச் சிலையார் தமிழகத்தில் தோன்றிய சிறந்த உரையாசிரியர் ஆவார். இவர் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் மற்றும் திருக்குறள் முழுமைக்கும் சிறந்த உரையை உருவாக்கிப் போந்தார். தொல்காப்பியம் முழுமைக்கும் இவர் உரை செய்திருந்தாலும் அவ்வுரையும், அது பற்றிய குறிப்புகள் ஏதும் இதுவரை கிடைத்தில. அவர் வாழ்ந்த காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு என்று அறிய முடிகின்றது. தெய்வச் சிலையார் தனக்கு முன் தோன்றிய உரையாசிரியர்களான இளம்பூரணர் உரையை இரண்டு இடங்களிலும், சேனாவரையர் மற்றும் நச்சினார்க்கினியர் உரைகளை மூன்று இடங்களிலும் மறுத்துள்ளதால் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கும் பிற்பட்டவர் என்பது உறுதி. பிற உரையாசிரியர்களைத் தம் உரையில் தவறாமல் நயமுடன் மறுத்துக்கூறும் நச்சினார்க்கினியர் இவருரையை ஓரிடத்திலேனும் மறுக்காமை இக்கருத்தை உறுதிப்படுத்தும். நச்சினார்க்கினியரின் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று ஆய்வாளர் கணிப்பர். எனவே அவருக்குப் பின் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர் வாழ்ந்திருத்தல் கூடும்.

தெய்வச் சிலையாரின் வாழ்விடம்:

தெய்வச் சிலையார் தமிழ் பிறந்த பாண்டிய நாட்டைச் சார்ந்தவர் ஆவார். இவரைப் பற்றிய குறிப்புகள் சில பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று இவர் பாண்டிய நாட்டுக் காவலூர் கோட்டத்து, வேம்ப நல்லூர் என்னும் ஊரினர் என்று குறிப்பிடுகின்றது.

"அரையான் தெய்வச் சிலையாரான எடுத்தகை அழகியான்"

அதே சமயம் மற்றொரு பாண்டிய மன்னனான ஜடவார்மன் வீரபாண்டியனின் முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று (கி.பி. 1306) திருநெல்வேலி மாவட்டம் மன்னார் கோவிலில் கிடைத்துள்ளது. இதில்,

"இளையாள்வார் தெய்வச்சிலை பெருமாளான விக்கிரம

பாண்டியனது காளிங்கராயன்"

என்று தெய்வச் சிலையாரைப் பற்றி குறிப்பிடுகின்றது. எனவே கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு இவர் பாண்டிய நாட்டினர் என்று துணியலாம்.

தெய்வச் சிலையாரின் சமயம் மற்றும் இனம்:

தெய்வச் சிலையார் சைவர் என்றும் வைணவர் என்றும் மாறுபட்டு உரைப்பர். இவர் வைணவர் என்பதற்குச் சில சான்றுகளைக் காட்டுவர்.

"பவ்வத் திறை யுலகு புல்லாணி கைதொழுவேன்

தெய்வச் சிலையார்க்கென் சிந்தை நோய் செப்புமினே"

(பெரிய திருமொழி:9:4-3)

என்று திருமாலைத் திருவாய் மொழியில் புகழ்ந்த திருமங்கையாழ்வார் தெய்வச் சிலையார் என்ற பெயரைத் திருமாலின் பெயருடன் சேர்த்து உரைப்பார். இதன் மூலம் இவர் வைணவர் என்பது உறுதியாகின்றது. வைணவர்கள் பலரும் இப்பெயரை அக்காலத்தில் சூடியிருந்ததைக் கல்வெட்டு சான்றுகளும் உறுதிசெய்கின்றன. அவை வருமாறு:

"அரையன் தெய்வச் சிலையான் எடுத்கை அழகியான"

(ARE,No:31/1920)

"விக்கிரமபாண்டிய காலிங்க ராயரான வேதச்சிலைப்பெருமாள்"

(ARE.No:391/1916)

இவர் வைணவர் என்பதற்கு,

"நிவந்தோங்கு உயர் கொடிச்சேவலாய் சொல்லுவோர் குறிப்பு மாயவனை நோக்கலில் கருடனாயிற்று வலம்புரித் தமக்கை மா:அல்திரு மகளோ அல்லன்"

என்று தம் உரை நூலில் திருமாலைச் சிறப்பித்துக் கூறுவதன் மூலம் இவரது வைணவப் பற்றினை அறியலாம். ஆனால்

"மன்னாப் பொருளும் அன்ன வியற்றே"

(தொல்-கிளவியாக்கம்-32)

என்ற சூத்திரத்திற்கு உரை வகுத்த தெய்வச் சிலையார்,

"பொருந்தும் பொருளும், பொருந்தாப் பொருளும் கூறவேண்டும் இடத்தும், பொருந்தும் பொருள் கூறுமிடத்தும், உம்மைக் கொடுத்துச் செல்ல வேண்டும்"

என்று உரை கூறி அதற்கு விளக்கமாக,

"வேதாகமத் தெளிவு ஒருவர்க்கு உணத்ததும்மிடத்து உலகும், உயிரும், பரமும் அனாதி, பதியும், பசுவும், பாசமும் ஆனாதி என வரும். உலகும், உயிரும், பரமும், பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும் பாசமும், பதியும் இவற்றோடு பொருந்தாத பொருளானவாறும் காண்க. பதி, பசு, பாசமென்னும் முப்பொருளும் அனாதி என்பது சைவசமயக் கொள்கையாகும்"

என்று சைவச் சமயத்தின் நுட்பக் கருத்துகளை ஈண்டு வெளியிடுவார். மேலும்,

"மந்திரப் பொருள்வையின் ஆஅக் குநவும்" (தொல்:எச்சவியல்-47)

என்ற நூற்பாவுக்குச் சேனாவரையரும் நச்சினார்கினியாரும் மந்திரம் வல்லார் வாய் கேட்டுணர்கவென என்று கூறிச் செல்லும் பொழுது இளம்பூரணர்,

"திரிதிரி ஸ்வாக கன்று கொண்டு

கரவையும் வந்திக்க ஸ்வாக"

என்றார் போல்வரும் என்று கூறி இது தீங்கு விளைவிக்கும் என்று கூறி அமைவார். இதற்குத் தெய்வச் சிலையார் கீழ்க்கண்டவாறு உரைவகுக்கின்றார்.

"மண்ணைச்சுமந்த வன்றானும் வரதராசன் மகன்றானும்

எண்ணிய வரகாலி மூன்றும் இரண்டு மரமு மோரியாறும்

திண்ண மறிய வல்லர்க்குச் சிவகதியும் பெறளாவே"

என்று கூறி மண்ணைச் சுமந்தவன் என்பதற்கு - ந, வரதராசன் மகன் என்பதற்கு - ம, வரகாலி மூன்று என்பதற்கு - சி, இரண்டு மரம் என்பதற்கு - வ, ஓர் யாறு என்பதற்கு - ய என்று வருமாயின் இது நமசிவாய என்ற ஐந்தெழுத்தாயிற்று என்று சைவத்தின் சிறப்பை எடுத்துரைப்பார். மேலே குறித்த நுட்பமான இவ்விளக்கங்களால் இவர் சிவநெறி செல்வர் என்பது தெளிவாகின்றது. எனவே பிறப்பில் வைணவராய் இருந்த போதிலும் இவர் சைவ நெறி செல்வராய் வாழ்ந்தார் என்பது விளங்கும். இவர் இனத்தால் அந்தணச் செல்வராவார். இதற்கு இவருரையில் பல குறிப்புகள் உள. அந்தணர்களைப் பற்றி பலவிடங்களில் சிறப்புடன் கூறிச்செல்கின்றார். சான்றாகத் தலைமை பற்றிய வழக்கிற்கு "பார்ப்பார் வேதம்" என்று பெருமையுடன் கூறுகின்றார். சொல் என்பதற்கு "வேதம்" என்று செப்புகின்றார். இந்நூல் செய்தான் "வைதீக முனிவன்" என்று பெருமையுடன் உரைக்கின்றார். இச்சான்றுகளால் இவர் பார்ப்பனக் குலத்தவர் என்பது உறுதி. தெலுங்கு மொழியையும் இவர் நன்கறிந்த காரணத்தால் இவர் தெலுங்கு மொழி பேசும் பார்ப்பனரோ என்று ஐயுரவேண்டியுள்ளது.

தெய்வச் சிலையாரின் இலக்கியத் திறன்:

தெய்வச் சிலையார் நுண்ணிய அறிவுடையார் என்பதை அவரின் உரையால் அறியலாம். கிளவியாக்கத்துத் தொடக்கத்தில் ஒவ்வொரு இயலுக்கும் உள்ள இயைபைக் கூறும் முறையால் இது எளிதில் விளங்கும். கிளவியாக்கத்து 45 மற்றும் 46 வது சூத்திரங்கள்,

"பலவினையையுடைய பொதுப் பெயரை ஒரு வினையாற் கூறாது பொது வினையாற் கிளத்தல் வேண்டும்"

என்று உரைக்கின்றது. இச்சூத்திரத்திற்கு மாறாக,

"பூ நாற்றத்த புகை கொளீஇ உன்றுவை

கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது

பிறிதுதொழி லறியா வாகலின் நன்றும்"

(புறநானூறு-14:13-15)

என்ற பாடல் பயின்று வந்ததால் இளம்பூரணர் "இதை எனின் அது பாடமறிந்து திருத்திக்கொள்க" என்றுரைப்பார். உண்டு என்பது சிறப்பு வினை என்பது அவர்தம் கருத்தாகும். மாறாகச் சேனாவரையரோ "உண்டு என்பது சிறப்பு வினையுமாம், ஒரோ வழிப் பொதுவினையுமாம்" என்று உரைக்கின்றார். தெய்வச் சிலையாரோ "உண்டு என்பது பொதுவினை என்று கொள்க என்னை?" என்றுரைக்கின்றார்,

"உண்ணு நீர் வேட்டேன் என வந்தார்க்கு"

(குறிஞ்சிக்கலி-15)

"பாலுமுண்ணாள் பழங்கண் கொண்டு"

(அகநானூறு-48)

என்றும்,

"களைப்புற வல்குல் கழுகுடைந் துண்டு"

(மணி-சக்கரவாளக்கோட்டம்-113)

எனவும்,

"கள்ளுண்ணாப் போழ்து"

((குறள்-930)

"உண்ணாமை வேண்டும் புலா அல்"

((குறள்-257)

என்றும் இவ்வாறு பயின்று வருகின்றது" என்று இதற்குப் பல்வேறு விளக்கங்களைக் கூறித் தெளிவாக்குகின்றார். மேலும் வியங்கோள் என்ற இலக்கணக் குறிப்பை மிகச்சிறப்பாக இவர் விளக்கிச் செல்கின்றார்.

"முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடு

மன்னா தாகும் வியங்கோட் கிளவி"

(தொல்-வினையியல்-29)

என்ற சூத்திரத்திற்கு உரை வகுத்த இளம்பூரணர்,

"முன்னிலை தன்மை இரண்டிடத்தும் செல்வனவாகிய வியங்கோள் வினைச்சொல் சிறு வரவின"

என்று கூறி இதற்கு உதாரணம்:-

"நீர் செல்க, நீ செல்க, யான் செல்க எனவரும் என்றும், இனி அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க போன்றவை பெருவரவினவாம்"

என்று உரைப்பார். இதற்குத் தெய்வச் சிலையார் கீழ்க் கண்டவாறு உரை வகுக்கின்றார்,

"மேற்சொன்னவற்றுள் வியங்கோள் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய இடத்து நிலைபெறா. எனவே படர்க்கை ஐந்து பார் கண்ணும் வரும் என்றவாறாம். நீ வாழ்க, உண்க எனவும் வருமாலெனின், அவை அக் ககரம் பெறக்காலும் பொருளினிது விளங்குதலின் அவ்வாறு வருவன மரூஉ வழக்கென்று கொள்க" என்று கூறி,

"கடாவுக பாகநின் கால்வல் நெடுந்தேர்"

எனச் செய்யுளகத்தும் வந்ததாலெனின், நீ கடாவுக என வாராது பாகக் கடாவுக என வருதலின் அது படற்கைப் பெயர் விளியேற்ற வழி வந்தது என்க,

"எண்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்"

(சிலம்பு-வழக்குரைக்காதை-77)

எனத் தன்மைகண் வந்ததாலெனின் ஆண்டு கெடுக எனப்பட்டது. ஆயுளாதலின் அதன் மேல் வந்ததென்க. இனி அவ்வியங்கோட் கிளவி ஈறு திரிந்து வந்து அப்பொருள்படுதலுங் கொள்க.

“வாழிய வென்னுஞ் செயவன் கிளவி

இறுதி யகரங் கெடுதலு முரித்தே”

(தொல்-எழுத்து-உயிர் மயங்கியல்-9)

என்றமையான் வாழ்க என்பது வாழி, வாழியர், வாழிய எனவும்,

“செப்பும் வினாவும் வழா அல் ஓம்பல்”

(தொல்:கிளவியாக்கம்-13)

என்றமையான் ஓம்புக என்பது அல் ஈறாகி வருதலுங் கொள்க.

“பயனில்சொல் பாராட்டு வானை மகன் எனல்

மக்கட் பதடி எனல்”

((குறள்-196)

என்றமையால் உடன்பாட்டிலும், மறையிலும் அவ்வீறு வருதலும் கொள்க” என்று வியங்கோளுக்குத் தலைசிறந்த விளக்கத்தை அளிக்கின்றார். இவர் தம் உரையில் கூறும் உதாரணங்கள் பல கலித்தொகையிலும், பத்துப் பாட்டிலும் காணப்படுகின்றன.

தெய்வச் சிலையாரின் பன்மொழிப் புலமை:

தெய்வச் சிலையார் தமிழைப் போன்றே வடமொழியிலும் புலமை மிக்கோராய்த் திகழ்ந்தார். அவர் தமிழ் மற்றும் வடமொழியின் நிலைகண்டு உணர்ந்தோராய்த் திகழ்ந்தார். தமிழ் மொழி இலக்கணத்திற்கு ஒப்பாக வடமொழி இலக்கணங்களை ஒப்பிட்டுக்காட்டி ஒப்பிலக்கியத்திற்கு அடித்தளமிட்டார். அவரின் வடமொழிப் புலமையைப் பலவிடங்களில் வெளிப்பட்டு நிற்கின்றது. தமிழ் இலக்கணச் சொல்லுக்கு நேரான வடமொழிச் சொற்களைப் பல விடங்களில் அவர் கூறிச் செல்கின்றார். தொல்காப்பியம் 233 ஆம் சூத்திரத்தில் வரும் “உரிச்சொல்” என்பதற்கு “தாது” என்றும், “இசை” என்பதற்கு “முக்கியம்” என்றும், “குறிப்பு” என்பதற்கு “இலக்கணை” என்றும், “பண்பு” என்பதற்கு “கைளணம்” என்றும், “முதல்” என்பதற்கு “காரகம்” என்றும், “இளிவரல்” என்பதற்கு “லோபம்” என்றும், “அடை” என்பதற்கு “விசேடணம்” என்பது போன்ற வடமொழிச் சொற்களைக் குறித்துக் காட்டுவார். சிலவிடங்களில் வடமொழி இலக்கண மேதையான பாணினியைச் சான்று காட்டுவார். பாணினியின் வடமொழி இலக்கியக் கொள்கையை 40, 87 ஆகிய சூத்திரங்களிலும், வடமொழி இலக்கணத்தை 2 ,66 , 68 81 292 ஆகிய உரைகளில் குறிப்பிடுகின்றார். சான்றாக

“வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை என்பன தம்மில் ஒருபுடை ஒப்புமையுடையவாதலிற் பாணினியார் தற்புருடமாசம் என்று குறிப்பிடுவார்” (எச்சவியல்-19) என்கின்றார்.

மேலும் “பஞ்சத் திராவிடம்”, “லோபம்”, “பரிணாமம்”, “வாக்கியம்”, “கோமூத்திரம்” போன்ற வடமொழிச் சொற்களைப் பரவலாகக் கையாள்கின்றார். வடமொழியின் கண் எழுவாய் ஆகிய பெயர் ஈறுகெட்டு உருபு ஏற்கும், அவ்வாறன்றித் தமிழ் மொழியின் கண் ஈறு திரியாது எழுவாய் ஆகிய பெயரின் மேலே உருபு நிற்கும் என்று இரு மொழி இலக்கணத்தையும் ஒப்பிட்டுக் கூறுகின்றார். இவர்,

“ஒருவினை ஒரு சொல் உயிர்பின் வழித்தே”

என்ற சூத்திரத்திற்கு உரையெழுதும் பொழுது “இப்பொருள் பாணினியாருக்கும் ஒக்கும்” என்கின்றார். மேலும்,

“வண்ணத்தின் வடிவின் என்ற சூத்திரத்தின் உரையில் வேற்றுமைத் தொகை என்பன தம்முள் ஒருபுடை ஒப்புமையுடைமை ஆதலின் பாணினியார் இதைத் தற்புருடமாசம் என்று குறிப்பிட்டார்”

என்றுரைக்கின்றார். இவற்றால் தமிழைப் போன்றே வடமொழியிலும் அன்னார் புலமை பெற்றோராகத் திகழ்ந்தார் என்பது நன்கு விளங்கும். மேலும் இவர் தெலுங்கு மொழியிலும் புலமையுடையோராய்த் திகழ்ந்தார் என்பதற்குச் சான்றுகள் உள. சான்றாக “சாலும்” என்ற சொல்லை “போலும்” என்ற பொருளில் வழங்குகின்றார். சாலும் என்பது தெலுங்கில் அப்பொருளிலே வழங்கி வருகின்றது உணரர்பாலது. இதற்கு,

“யானும் என் எஃகமும் சாறும் நீயும் நின்படைக்

கலமும் சாறீர் அவனும் அவன் படைக்கலமும் சாலும்”

என்று சான்று காட்டி நிறுவுகின்றார்.

இலக்கியப் புதுமை:

தெய்வச் சிலையார் இலக்கிய அறிவு மிக்கோராய்த் திகழ்ந்தார். திருக்குறளுக்கு இவர் தரும் விளக்கங்கள் இலக்கியப் புதுமையுடையனவாக விளங்குவதுடன் இவரது இலக்கண இலக்கிய அறிவை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. சான்றாக,

“வான் நின்று உலகம் வழங்கி வருதலால்

தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று”

(குறள்-11)

என்பதற்குப் பரிமேலழகர் “மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலால், அம் மழைதான் உலகத்திற்கு அமிழ்தம் என்று உணரும் பாண்மையை உடைத்து” என்று கூறுவார்.

“நிற்ப என்பது நின்று என திரிந்து நின்றது

யாத னுருபிற் கூறிற் றாயினும்

பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாறும்”

(தொல்-வேற்றுமை மயங்கியல்-22)

என்ற நூற்பாவுக்கு விளக்கக் கூறும் தெய்வச் சிலையார் மேற்சொன்ன குறளை எடுத்துக்காட்டி விளக்குகின்றார். இந்நூற்பாவின் பொருளாக,

"யாதொன்றன் உருவிற் கூறினும் பொருள் செல்லும் வழி வேற்றுமையும் கெல்லும் யாதனுருபு என்பது வேற்றுமையில்லாத உருபு. உருபு எனினும் வடிவம் எனினும் ஒக்கும்" என்று கூறி

"அம் மூவுருபின் தோன்றலாரே"

(தொல்:-சொல்-பெயர்-6)

என வடிவிற்குப் பெயராகி வந்தது,

"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"

என்பதால் மருந்துண்டு நோய் தீர்த்தது எனவும் உருவுழி உலகம் வழங்கி வருவதற்கு மழை ஏதுவாகலானும், நோய் தீர்த்தற்கு மருந்து ஏதுவாகலானும் இவற்றிற்குப் பொருளுரைக்கும்கால் மழை நிலை நிற்றலான் உலகநடை தப்பாது எனவும், மருந்துண்டலால் நோய் தீர்ந்தது எனவும் உரைக்க வேண்டுதலின் இவை வேற்றுமை உருபால் வந்திலவாயினும் பொருண்மை முகத்தான் வேற்றுமையாதெனின் இவை இவ்வாறும் வரப்பெறும் என்று வழுவமைந்தவாறாம்" என்று உரைக்கின்றார்.

எச்சவியலின் 33 வது சூத்திர உரையில் விளக்கம் அளிக்கப் போந்த தெய்வச் சிலையார்,

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது"

((குறள்-165)

என்ற குறளைச் சான்று காட்டி,

"கேடு பயத்திற்கு அழுக்காறுதானே அமையும். பகைவர் கேடு தருதல் தப்பியும் வரும் எனப்பொருள் உரைக்க வேண்டுதலின் வரும் என்பது எஞ்சி நின்றது"

என்று விளக்கமளிக்கின்றார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

((குறள்-226)

என்ற குறளுக்கு விளக்கம் அளிக்கும் தெய்வச் சிலையார்,

"அற்றாறது குணங்களை அழிக்கும் பசியைப் போக்குவது செய்ய ஒருவன் தான் தேடின பொருள் வைப்பற்கு இடம் பெற்றான் ஆம் என உரைக்க வேண்டுதலின் ஆம் என்னும் வினைக் குறிப்பு எஞ்சி நின்றது"

என்று விளக்குவார். இவ்வாறு பரிமேலழகரும் கூறாத குறளுக்குரிய விளக்க உரைகளை இவர் கூறிச்செல்வது நோக்கத்தக்கதாகும். இவர் பலவிடங்களில் குறட்பாக்களைத் தம் உரைக்கு எடுத்துக்காட்டுகளாக கொண்டு விரித்து இலக்கணம் கூறுதல் சிறப்பு.

தெய்வச் சிலையாரின் உரைநலம்:

தெய்வச் சிலையாரது உரையில் சொல்லும், பொருளும் செறிந்து காணப்படும். ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தவறாது உரையினது அளவை எழுத்துகளால் குறிப்பிட்டுச் செல்கின்றார். கிளவியாக்கத்தின் இறுதியில்,

“இவ்வோத்தினுள் சூத்திரமும் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது”

என்கின்றார். தம் உரைக்குத் திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றார். பிற உரையாசிரியர்கள் வழக்கினின்று எடுத்துக்காட்டும் பொழுது இவர் நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுவது தனிச்சிறப்பாகும். இவர் பிற உரைக்காரர்களையோ, பிறர் தம் கருத்துகளையோ எவ்விடத்தும் வெளிப்படையாகக் குறிப்பிட்டிலர். உரையில் பிறர் கருத்துகளை மறுத்துக் கூறாமல் தம் கருத்தையே வலியுறுத்திச் செல்வார். பிற உரைகளை மறுக்க நேரிடினும் அவர்தம் பெயர் கூறி மறுத்தாரல்லர். அவ்வாறு அவசியம் நேரிடின் மிகக்குறைவான இடங்களிலேயே பிற உரைகளை மறுப்பார். இவர் பிற உரையாசிரியரிடமிருந்து 13 இடங்களில் பாடவேறுபாடு கொள்கின்றார். அவை சொல்லதிகாரச் சூத்திரங்கள் 117, 147, 229, 268, 295, 349, 354, 358, 361, 394, 400, 411, 444 போன்றவையாகும். 37 வது சூத்திரத்தில் பிற உரையாசிரியர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு உரை வகுக்கின்றார். 11 ஆம் சூத்திரத்தில் ஒரு சில மாறுபாடுகளை மட்டும் கொள்கின்றார். சொல்லதிகாரச் சூத்திரங்களில் 1, 32 ஆகிய இடங்களிலும் இளம்பூரணர் உரையையும் 88, 101, 443 ஆகிய சூத்திரங்களில் சேனாவரையர் மற்றும் நச்சினார்க்கினியர் உரைகளையும் மறுத்துள்ளார். 42, 405 ஆம் சூத்திரங்களில் இவர் மறுப்பது யாருரையை என்று அறியக்கூடவில்லை. பிறர் உரையை மறுக்குமிடத்தும் அவர்கள் பெயரைக் கூறாமல் விட்டுச் செல்லுதல் இவரியல்பு. சான்றாகப் “பெண்மை அடுத்து மகன் என் கிளவிக்கு” என்ற நூற்பாக்கு விளக்கம் எழுதுகையில்,

“விளையாட்டு பருவத்துப் பெண் மகளைப் பெண் மகன் என்றல் பண்டையோர் வழக்கு”

என்று சேனாவரையர் உரைத்ததை அவர்தம் பெயர் குறிப்பிடாமல் மறுத்துச் செல்கின்றார்.

சூத்திரங்களின் அமைப்பும், அடைவும்:

தெய்வச் சிலையார் நூற்பாக்களை அமைத்திருக்கும் முறை மிகுந்த ஆய்விற்குரியதாகும். இவரது உரை தொல்காப்பியச் சொல்லதிகார உரை வைப்பு முறைக்கு மாறுபாடாய் அமைந்துள்ளது. வினைமுற்றுக்குரிய மூன்று சூத்திரங்களைப் பிற உரையாசிரியர்கள் எச்சவியலில் வைக்க, இவர் வினையியலில் வைத்துள்ளார். இதற்குரிய விரிவான விளக்கமும் தந்துள்ளார்கள். எச்சவியலில் உள்ள இசை நிறை, அசை நிலை என்னும் சூத்திரத்தைப் பிற உரையாசிரியர்கள் 14 ஆம் 15 ஆம் சூத்திரமாகக் கொள்ள, இவரோ 26 வது சூத்திரமாக வைத்துள்ளார். எனென்றால் 26 முதல் 40 வரை உள்ள சூத்திரங்கள் இசை நிறை, அசை நிலை பற்றியவையாதலால் அவற்றோடு இது இயைந்து நிற்க இச்சூத்திரத்தை அங்குப் பொருத்தினார். வேற்றுமை மயங்கியல் ஐந்தாம் வேற்றுமை உருபு மயக்கத்தைக் கூறியபின் ஆறாம் வேற்றுமை மயக்கத்தைக் கூறுவதே முறையென்று துணிந்து கூறி “அதுவென் வேற்றுமை” என்று கூறி,

"ஆறன் மருங்கின் வாழ்ச்சி"

எனத் தொடங்கும் சூத்திரங்களை அடுத்தடுத்து அமைத்துள்ளார். பிற உரையாசிரியர்கள் மூன்றாம் வேற்றுமை மயக்கத்தைக் கூறும் சூத்திரத்தையடுத்து

"ஆறன் மருங்கின் வாழ்ச்சி"

என்னும் சூத்திரத்தை அமைத்தனர். ஆனால் இவர் அவர்களினின்று மாறுபடுகின்றார். இவ்வாறு சொல்லதிகாரத்தில் உள்ள சூத்திர அமைப்பு முறையைத் தன் நுட்பமான அறிவு கொண்டு மாற்றி அமைத்துள்ளார். எச்சவியலில் உள்ள மூன்று சூத்திரங்களை வினையியலின் இறுதியில் வைத்து உரையெழுதுகின்றார். அதற்கு,

"வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனால் பெற்றது என்னை எனில் அஃது எமக்குப் புலனாயிற்று அன்று"

என்று காரணம் கூறுகின்றார். மேலும்

இம்மூன்று சூத்திரமும் "ஈண்டை தொடர்புபட்டுக் கிடந்த இதனை உரையெழுதுவோர் பிரிநிலை வினை என்னும் சூத்திரத்துள் சொல்லப்பட்ட பெயரெச்சம், வினையெச்சம் என்பனவற்றை ஈண்டு ஓதப்பட்ட பெயரெச்ச வினையெச்சமாகக் கருதி ஆண்டு சேர வைத்தார் என்பாரும் உளர்"

என்று பிறர் கருத்தையும் உரைக்கின்றார்.

எச்சவியலில் இசை நிறை என்னும் 15 ஆம் சூத்திரத்தை 29 வது சூத்திரமாகவும் வேற்றுமை மயங்கியலில் அதுவென் வேற்றுமை என்னும் 10 ஆம் சூத்திரத்தை 15 ஆம் சூத்திரமாகவும் ஆறன் மருங்கின் 13 ஆம் சூத்திரத்தை 16 ஆம் சூத்திரமாகவும் மாற்றியமைத்துப் புரட்சி செய்தார். இவருக்கு முற்பட்ட உரையாசிரியர்களின் சூத்திர அமைப்பு முறைகளை இவர் மாற்றி அமைக்கின்றார். ஒரு சூத்திரத்தை இரண்டாக்குகின்றார். சில சூத்திரங்களை ஒரு சேர எழுதி ஒரே சூத்திரமாக்குகின்றார். உயிரியலில் இது போன்ற மாறுதல்களை அதிகம் புகுத்தியுள்ளார். இவ்வாறு துணிச்சலுடன் பல மாற்றங்களை இலக்கண உலகில் புரிந்துள்ளார். எனவே இவரது உரை தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் பயில விரும்பும் ஒவ்வொருவரும் அறிந்தின் புறத்தக்க அற்புதப் பேழையாக இலங்கி வருகின்றது.

உரையின் சிறப்பு:

தெய்வச் சிலையாரின் உரை பல்வகைச் சிறப்புகளைக் கொண்டது. பிற உரையாசிரியர்கள் கூறாத செய்திகளை இவர் கூறிச் செல்வது அவர்தம் சிறப்பு. எச்சப் பெயர் என்பதே பெயரெச்சமாக வந்தது என்பது இவர் தம் கருத்து. இவர்தம் உரையில் பல புதிய விளக்கங்களைக் காணலாம். பிற உரையாசிரியர்கள் கூறாத விளக்கங்களை இவர் உரையில் காண்பது சிறப்பு.

"செப்பும் வினாவும் வழா அல் ஓம்பல"

என்ற நூற்பாவுக்குப் புதிய வகையில் விளக்கம் அளிக்கின்றார். அது துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாமை போன்றவை என்கின்றார். இதற்கு அவர் தரும் விளக்கங்கள் வருமாறு:

துணிந்து கூறல் --- தோன்றியது கெடுமோ என்ற வழி கெடும்

என்றல்

கூறிட்டு மொழிதல் --- செத்தவன் பிறப்பானோ என்ற வழி

பற்றறற் துறந்தானோ பிறனோ என்றல்

வினாவி விடுத்தல் --- முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்ற

வழி எம்முட்டைக்கு எப்பனை என்றல்

வாய் வாளாமை --- ஆகாயப் பூ நன்றோ தீதோ என்றார்க்கு

உரையாடாமை

வேற்றுமை என்பதற்குப் புதுமையான பொருள் விளக்கம் அளிக்கின்றார். "பொருள்களை வேறுபடுத்தினமையால் பெற்ற பெயர் என்னை?, வேறுபடுத்தியவாறு எனில் ஒரு பொருளை ஒரு கால் வினை முதலாக்கியும், ஒரு கால் செயப்படு பொருளாக்கியும், ஒரு கால் கருவியாக்கியும், ஒரு கால் ஏற்பது ஆக்கியும், ஒரு கால் நிற்பது ஆக்கியும், ஒரு கால் உடையது ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க" என்கின்றார்.

இவர் சிறந்த எடுத்துக்காட்டுகளைத் தம் உரையில் இடம் பெறச் செய்வதில் வல்லவர். வேற்றுமை மயங்கியலில் 20 வது சூத்திரத்திற்கு உரை வகுக்கும் போது சிலப்பதிகாரக் கதை நிகழ்வுகளைச் சுருக்கமாக உரைக்கும் வெண்பா ஒன்றைச் சான்று காட்டுகின்றார்.

"காதலியைக் கொண்டு கவுந்தி யோடுக்கூடி

மாதரிக்குக் காட்டி மனையின் அகன்றுபோய்க்

கோதில் இறைவனது கூடற்கண் கோவலன் சென்று

ஏதம் உறுத்தல் வினை"

இவர் திருக்குறளின் சில பாக்களுக்குப் புதிய வகையில் உரையெழுதிச் செல்கின்றார். அறனோக்கி (189) வானின்று உலகம் (11) அறுக்காறு உடையார்க்கு (165) அற்றார் அழிபசி (226) போன்ற குறள்களுக்கு இவரது உரை மிகவும் சிறப்புடன் அமைந்துள்ளது. எச்சவியலின் 16 ஆம் நூற்பா உரைக்கு "உலகம் உவப்ப" என்ற திருமுருகாற்றுப் படையின் முதல் ஆறு அடிகளுக்கு நயம் எழுதுதிச் செல்கின்றார்.

இவரது உரைநடை எளிமையானது, உயிரோட்டமானது, தங்கு தடையற்ற நீர்போக்கு போன்றது. சான்றாகக் கீழ்க்கண்ட உரையைக் காட்டலாம்:-

"காலம் என்பது முன்னும், பின்னும், நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும், கீழும், நடுவுமாகி எல்லா உயிர்க்கும் தோன்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது ஜீவன். உடம்பு என்பது மனம், புத்தி, ஆங்காரமும், பூததந் மாத்திரையுமாகி வினையினார் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் முன்னே. உடம்பு இதனை மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும், பெண்ணும், அலியும் ஆகிய இளமையை வரைந்து நிற்கும் பரம்பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகிற்கு அருள் செய்வது. சொல் என்பது

எழுத்தினான் இயன்று பொருள் உணர்த்துவது. அச்சொல்லின் இயன்ற மந்திரம், விடம் முதலியன தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று".

தெய்வச் சிலையாரின் சமூக உணர்வு:

தெய்வச் சிலையார் தான் தினமும் கண்டும், கேட்டும், அறிந்த சமகால நிகழ்வுகளைத் தன் உரையில் குறிப்பிட்டுச் செல்கின்றார். இவ்வாறு அவர் சமூக உணர்வுடையவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் அறச்செயல்கள் நிகழ்ந்தன. குளங்கள் வெட்டுதல், அன்னச் சாலைகள் அமைத்தல் போன்ற தருமக் காரியங்கள் நடந்தன. அதைத் தன் உரையில் குறித்துச் செல்கின்றார். சான்றாக,

"யாட்டினது கரைகண் நின்ற மரத்தை அறச்சாலை இயற்றுதற்கு ஊரினின்று வந்து மழுவினானே வெட்டினான் சாத்தான்"

"காவோடு அறங்குளம் தொட்டான்"

அவர் காலத்தில் விவசாயக் கூலிக்கு நெல்லும், காணமும் (நாணயம்) ஊதியமாகத் தந்தனர். இதைத் தன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:_

"நெல்லாதல் காரணமாதல் ஒருவன் கொடுப்பக் கொண்ட வழி இன்றைக்குச் சோறு பெற்றேன் என்னும் அவ்வழி சோற்றுக்குக் காரணமாகிய நெல்லும் காணமும் சோறு ஆகு பெயராகின என்றவாறு"

அக்காலத்தில் பாண்டிய நாட்டில் சில ஊர்களில் கற்றோர் நிறைந்திருந்தனர் என்பதை,

"இவ்வூரார் எல்லாம் கல்வியறிவுடையார்"

என்று குறிக்கின்றார். அக்காலத்தில் பாண்டிய நாட்டில் நெசவுத் தொழில் மிகுதியாகக் காணப்பட்டது. இதை,

"நெய்தான் என்ற வழி நெய்யப்பட்ட பொருளும், நெய்வதாகிய தொழிலும், நெய்வதற்குக் கருவியும், நெய்வதற்குக் காலமும், நெய்தற்கு இடமும், நெய்யும் கருத்தாவும், அதனைக் கொள்வானும், அதனாற் பயனும் உள்ளவழி" என்கின்றார்.

"ஆடையை நெய்தான், கூடத்துக் கண் நெய்தான், ஆடையை நெய்து முடித்தான்"

"ஆடையை நெய்தான் தனக்கு, வேளக் காணி என்பது வேளாக் காணியிற் பிறந்த ஆடையை அப்பெயரான் வழங்குதலின்"

என்றுரைக்கின்றார். இவ்வாறு ஆடை நெய்தலைச் சிறப்பித்துக் கூறுவதால் இவர் நெசவுத் தொழில் நிறைந்த ஊரினர் என்பது தெரிகின்றது. இவர் பரந்த உலக அனுபவமும், உலகியல் அறிவும், ஆற்றலும் கொண்டவர். இதை நான்காம் வேற்றுமை உருபிற்கு உரையெழுதும் போது,

"ஈழத்திற்கு ஏற்றிய பண்டம்"

என்று எழுதிச் செல்லும் பொழுது புலனாகின்றது. இதன் மூலம் தமிழர் இலங்கையுடன் அக்காலத்தில் நிகழ்த்திய வணிகத்தைச் சான்றளிக்கின்றார்.

இடைக்காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்த "கொல்லம்" என்ற பட்டினம் கடற்கோளால் அழிவுற்றது. பின் நடந்த கடற் பெயர்ச்சியின் விளைவாய்ப் புதிய நிலப்பகுதி தோன்றியது. இப்புதிய நிலப்பகுதிக்குக் குடியேறிய மக்கள் இதனையும் "கொல்லம்" என்றே அழைத்தனர். இங்குப் புதிதாய் மக்கள் குடியேறிய ஆண்டு கொல்லம் ஆண்டு என்று கணக்கிடப்படுகின்றது. பரந்த உலக அனுபவமுடைய இவர் இதைக் கண்டு தன் உரையில்,

"கூபகமும் கொல்லமும் கடல்கொள்ளப்

படுதலின் குமரியாற்றிற்கு வடகரைக்கண்

அப்பெயரானே கொல்லம் எனக் குடியேற்றினார்"

என்று குறிப்பிடுவார். இவற்றால் கொல்லம் ஆண்டு யாது என்பது பற்றிய குழப்பத்திற்குத் தெளிவு கிடைத்தது. செந்தமிழ் நாடு என்பது சோழ நாடு என்றும் பாண்டிய நாடு என்றும் பல்வேறு அறிஞர்கள் மாறுபட்டு உரைப்பர். ஆனால் இவரோ வடவேங்கடம் முதல் தென் குமரிவரை உள்ள நிலப்பகுதி முழுமையுமே செந்தமிழ் நிலம் என்று புதுமையுடன் உரைப்பார்,

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்"

இன்றைய தமிழ்நாட்டின் எல்லையை அன்றே தெளிவுபடுத்தி உரைத்த தெய்வச் சிலையாரின் திறம் எண்ணி வியக்கலாம்.

முடிவுரை:

செய்யுள்களுக்கு உரை வகுக்கும் உரையாசிரியர்கள் சிறந்த புலமை கொண்டோராக இருத்தல் வேண்டும். மூலநூலை ஆழக்கற்று அதன் நுட்பங்கள் யாவற்றையும் கற்போருக்கு எளிய முறையில் விளக்கமாக எடுத்துரைப்போராக இருத்தல் அவசியம். ஒருவகையில் பார்த்தால் மூல நூலின் நிறை, குறைகளை எடுத்துரைப்போராய் அவர் திகழ வேண்டும். இவ்வாறாக ஒரு நூலுக்குப் பலர் உரை எழுதியிருந்தாலும் அவற்றில் யாதேனும் ஒன்றே சிறந்ததாகக் கொண்டாடப்படும் அவ்வுரையே அந்நூல் சிறக்க உதவுகின்றது. மாறி வரும் காலச் சூழலுக்கேற்ப அறிவும், ஆற்றலும் மாறிக்கொண்டே வருவதால் முன்னர் வகுக்கப்பட்ட உரைகள் பல பின்னர் வந்த உரையாசிரியர்களால் மறுக்கப்பட்டன. புதியதாய்ப் பல புத்துரைகள் தோன்றின. எனவே இலக்கிய, இலக்கண நூல்களை ஐயந்திரிபர கற்க உரை நூல்கள் இன்றியமையாததாகின்றது. அவ்வகையில் தமிழில் தோன்றிய உரைகளில் தெய்வச் சிலையாரின் உரை சிறப்பான இடம் பெறுகின்றது. இவருடைய உரை தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் கற்போர் சிறக்க உதவுகின்றது. தமக்கு முன் உரை செய்த உரையாசிரியர்கள் போன்றல்லாமல் அவர்கள் காட்டிய வழியில் செல்லாமல் தனக்குச் சரி எனத் தோன்றும் வழியில் பாதை வகுத்துச் சென்றார். பிறரின் உரைகளைப் பற்றி பொருட்டாகக் கொள்ளாமல் தன் வழியே சென்று உரை வகுத்தார்.

தெய்வச் சிலையார் தமிழையும், வடமொழியையும் ஆழக் கற்று அதன் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்து திளைத்ததால், இவரது உரை கற்போர் காமுறத் தக்க வகையில் அமைந்துள்ளது. பிற மொழியாகிய சுந்தரத் தெலுங்கிலும் இவர் பாண்டித்தியம் உடையோராய்த் திகழ்ந்தது போற்றுதற்குரியது. தான் அடைந்த பரந்த உலகியல் அனுபவங்களைத் தம் உரையில் பதிவு செய்து விட்டுச் சென்றதன் மூலம் சமூக உணர்வுடையோராய்த் திகழ்ந்தார். அதிகார வைப்பு முறையில் இவர் புகுத்திய புதுமை இவர் தம் காலத்தில் புரட்சியாளராய்த் திகழ்ந்தார் என்பதை உணர்த்தும். இவர் அந்தணராய்த் திகழ்ந்த போதிலும் வருணாசிரமத் தருமத்தை ஓரிடத்தேயும்

புகுத்தினாரில்லை. உரை கூறிச் செல்லும் பொழுது தம் கருத்தைக் கற்போரிடம் திணிக்காமல் நயமுடன் கூறிச் செல்வது இவர்தம் சிறப்பு. இவரது நடை தெள்ளிய நீரோடை போன்றது என்பதால் கற்போர் புரிந்து கொள்ளுதல் எளிது. இவ்வாறு பல்வேறு சிறப்பியல்புகளையும், திட்ப நுட்பங்களையும் கொண்டதாக இவருரை திகழ்கின்றது. தமிழில் இவர் செய்த பிற உரைகள் ஏதும் நமக்குக் கிடைக்காமை பேரிழப்பாகும். பழமையும், புதுமையும், பரந்தும், விரிந்தும், ஆழமும், சிறப்பும் கொண்ட தமிழிலக்கிய வரலாற்றில் உரையாசிரியர்களின் பங்கு அளப்பரியதாகும். அவற்றுள் தெய்வச் சிலையாரின் பங்கு முதன்மையானது என்பதில் ஐயமில்லை.

சுருக்கம் (Abbrevations)

[1] ARE-Annual Report on Indian Epigraphy

பார்வை நூற்பட்டியல்:

[2] பரிமணம்.அ.மா.& பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), அகநானூறு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[3] பரிமணம்.அ.மா. & பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), புறநானூறு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[4] பரிமணம்.அ.மா. & பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), கலித் தொகை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[5] தொல்காப்பியம்-தெய்வச் சிலையார், (1929), கரந்தை: கரந்தை தமிழ்ச் சங்க வெளியீடு

[6] தொல்காப்பியம்-தெய்வச்சிலையார் உரை. (கு.சுந்தரமூர்த்தி விளக்கவுரையுடன்), (1963), சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

[7] திருக்குறள், (2006), சென்னை: கௌரா பதிப்பகம்

[8] திருக்குறள்-மணிவிளக்க உரை (கா.அப்பாதுரையார்), (1967), சென்னை: அலமேலு நிலையம்

[9] சிலப்பதிகாரம், (1979), சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

[10] மணிமேகலை, (2005), சென்னை: பாரி நிலையம்

[11] பெரிய திருமொழி, (1956), சென்னை: மர்ரே அண்டு கம்பெனி

[12] நடராஜன்.தி.சு. (2013), உரைகளும் உரையாசிரியர்களும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[13] பாலசுப்பிரமணியன்.சி. (1998), தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை: மணமலர்ப் பதிப்பகம்